# மணப்பாறை நகராட்சி

**2024 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 28.06.2024-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு அறிஞர் அண்ணா நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 28.06.2024 | **பொருள் – 1**<br>சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை) சட்டம் 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37 வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை) விதிகள் 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு ,விற்பனை ஒழுங்கு முறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம் 2015-ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் மணப்பாறை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்கு முறை) துணை விதிகள் 2024-ல் மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு .<br>அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>ஆ) மணப்பாறை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2024-ன் தெரிவித்துள்ளவாறு நகர விற்பனை குழு அமைப்பதற்கு மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், தேர்தல் நடத்துதல் மற்றும் தேர்தல் தொடர்பான அறிவிப்பினை தினசரி நாளிதழ்களில் பிரசாரம் செய்வதற்கும், வாக்காளர் பட்டியல் தயாரித்து வெளியிடுதல் ஆகிய அனைத்து பணிகளையும், மேற்கொள்ள இத்திட்டத்திற்காக வழங்கப்படும் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்:2408/2023/எப்1) | **தீர்மான எண்.491<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 2**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் அனைத்து வார்டுகளிலும் வீடு மற்றும் வணிக நிறுவனங்களிலிருந்து உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகள் நகராட்சி வாரச்சந்தையில் உள்ள MCC மையத்தில் இருந்து அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு தனியார் லாரியில் ஏற்றுவதற்கும், | **தீர்மான எண். 492<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தாதேவி,** |

<table>
<tr>
<td></td>
<td>நகர்ப்பகுதியில் உள்ள புல், செடி, கொடிகள் மற்றும் முற்புதர்கள் அகற்றுவதற்கும், பருவமழை தடுப்பு நடவடிக்கையாக நகர்ப்பகுதியில் தேங்கும் மழைநீரை அப்புறப்படுத்துவதற்கும், வாய்க்கால்களில் உள்ள அடைப்புகளை நீக்கி அதிலுள்ள மண் முதலியற்றை JCB மூலம் அப்புறப்படுத்தும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.478 நாள்.05.03.2024-ன்படி ரூ.3.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டதில் மேற்படி பணிக்கு 13.06.2024-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை<br>(ஒருமணி நேரத்திற்கு வாடகை, டீசல் படி உட்பட) ரூபாயில்</th></tr>
<tr><td>1</td><td>பி.வடிவேல், ஸ்ரீ குமரன் எர்த் மூவர்ஸ்,<br>மதுரை ரோடு, மணப்பாறை</td><td>Rs.1300/-</td></tr>
<tr><td>2</td><td>எ.இளங்கோவன், ஜேடிபி எர்த் மூவர்ஸ் &<br>லாரி சர்வீஸ், மணப்பாறை</td><td>Rs.1100/-</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள எ.இளங்கோவன், ஜேடிபி எர்த் மூவர்ஸ் & லாரி சர்வீஸ், மணப்பாறை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்<br>
2. செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.0332/2024/எச்1)</td>
<td>14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.</td>
</tr>
<tr>
<td>28.06.2024</td>
<td>பொருள் – 3<br>
இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிகள் (பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு பவுடர், பினாயில் மற்றும் பல..) வாங்குவதற்கு அரசு கூட்டுறவு நிறுவனமான தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சிராப்பள்ளி அவர்களின் மூலம் வாங்கிக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு;-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1153/2024/எச்1)</td>
<td>தீர்மான எண். 493<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 28.06.2024 | **பொருள் – 4**<br>இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் அனைத்து வார்டுகளிலும் உள்ள வீடு மற்றும் வணிக நிறுவனங்கிளிலிருந்து உருவாகும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் இதர பொருட்களை நகராட்சி வாரச்சந்தையில் உள்ள MCC மையத்திலிருந்து அரியலூர் அல்ட்ராடெக் சிமெண்ட் ஆலைக்கு தனியார் ஒப்பந்த நிறுவன வாகனம் மூலம் அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது நகராட்சி வசம் கனரக வாகனங்கள் ஏதும் இல்லாததால் தனியார் நிறுவனத்தின் இப்பணியில் தொய்வு ஏற்படும் போது கழிவுகள் அதிகமாக சேர்ந்து திடக்கழிவு மேலாண்மை பணி பாதிப்பு ஏற்படுகிறது. அச்சமயத்தில் நகராட்சி மூலம் கழிவுகளை உடனடியாக அரியலூர் அல்ட்ராடெக் சிமெண்ட் ஆலைக்கு அனுப்புவதற்கு வாகன வாடகை செலவு உட்பட உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>;-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1137/2024/எச்1) | **தீர்மான எண். 494**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 5**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் 27 வார்டுகளிலும் தரம் பிரிக்கப்பட்டு பிளாஸ்டிக் கழிவுகள் MCC மையத்திற்கு கொண்டு வரப்பட்டு பண்டல் போடும் இயந்திரம் மூலம் (Bailling Machine) போடப்பட்டு அரியலூர் சிமெண்ட் ஆலைக்கு கொண்டு செல்லப்படுகிறது. தற்போது இயந்திரம் முற்றிலும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே அதை உள்ளூர் விலைப்புள்ளி கோரி சரிசெய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.25,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>;-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்துகொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1136/2024/எச்1) | **தீர்மான எண். 495**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| 28.06.2024 | **பொருள் – 6**<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட மதுரை ரோடு செல்வலட்சுமி திருமண மண்டபம் பின்புறம், நகர் ஊரமைப்பு துறையால், நகர நில அளவு வார்டு எண்-எப், பிளாக் எண்.08, நகரளவு எண்:127 (சர்வே எண்.715/7 பகுதி) கொண்ட 2.45 ஏக்கர் பரப்பளவில், 27 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு, மனைப்பிரிவு எண்.25/1990-ல் வடிவமைப்பு அனுமதி வழங்கப்பட்டு பூங்காவாக 10675.00 சதுர அடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.<br>மேற்படி இடத்தை திரு.பக்ரூதின், த/பெ.திரு.எம்.அப்துல் ஹமீது என்பவர் பூங்கா ஒதுக்கீடு இடத்தில் இருந்த அரசமரத்தினை அகற்றி, வேலி அமைத்து வருவதை தடுத்த நிறுத்த முற்பட்டதற்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.No.6493/2024-ல் 1).மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சி, 2)மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சி, 3) வட்டாட்சியர், மணப்பாறை மற்றும் 4) நகராட்சி ஆணையாளர் ஆகியோரை எதிர் வாதிகளாக இணைத்து வழக்கு தொடர்ந்துள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>** :<br>(அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ஆ) மேற்படி வழக்கு தொடர்பான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 6493/2024/ எப்.1) | **தீர்மான எண். 496**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 7**<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.டி, பிளாக் எண்.05, நகரளவு எண்.24/2 மற்றும் 24/10 கொண்ட இடத்தில் உரிமையாளர், திரு.என்.துரைசாமி, த/பெ.நல்லுக்கவுண்டர், மேற்கு தெரு, செவலூர் என்பவர் மேற்படி இடத்தில் கட்டிடம் கட்ட எவ்வித அனுமதியும் வழங்கக் கூடாதென திருமதி.சாந்தி, க/பெ.சுகுமார், 40/23,சந்தியாபுரம், மதுரை ரோடு என்பவர், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.No.8956/2023-ல் 1)மாவட்ட ஆட்சியர், திருச்சி, 2)மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சி, 3)வருவாய் கோட்டாட்சியர், ஸ்ரீரங்கம், 4)வட்டாட்சியர், மணப்பாறை, 5) தனி வட்டாட்சியர், நில எடுப்பு மணப்பாறை, மற்றும் 6)நகராட்சி ஆணையாளர் ஆகியோரை எதிர் மனுதாரர்களாக இணைத்து வழக்கு தொடர்ந்துள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>** :<br>(அ) மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மான எண். 497**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |

<table>
<tr>
<td></td>
<td>(ஆ) மேற்படி வழக்கு தொடர்பான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1276/2023/ எப்.1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.06.2024</td>
<td>பொருள் – 8<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.டி, பிளாக் எண்.04, நகரளவு எண்.102 கொண்ட இடத்தில் வசிக்கும் திருமதி.சீரங்கம்மாள் க/பெ.சுப்பாகவுண்டர், விராச்சி தெரு, வெள்ளக்கல். என்பவர் தனது வீட்டிற்கு பக்கத்து வீட்டில் வசிக்கும் திரு.நடராஜன் த/பெ.பொன்னுசாமி என்பவர் அனுமதி பெறாமல் கட்டிப்பணிகள் செய்து வருவதாகவும், தனது வீட்டின் ஒரு பகுதியையும் சேர்த்து கட்டிடம் கட்டுவதாகவும் தெரிவித்து, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.No.10825/2023-ல் 1)அரசு செயலாளர், சென்னை, 2)மாவட்ட ஆட்சியர் ,திருச்சி, 3)நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், தஞ்சாவூர், மற்றும் 4)நகராட்சி ஆணையாளர் ஆகியோரை எதிர் மனுதாரர்களாக இணைத்து வழக்கு தொடர்ந்துள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u> :<br>(அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ஆ) மேற்படி வழக்கு தொடர்பான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1051/2023/ எப்.1)</td>
<td>தீர்மான எண். 498<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.</td>
</tr>
<tr>
<td>28.06.2024</td>
<td>பொருள் – 9<br>தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட விதிகள் - 2019 இன் படி எதிர் வரும் ஐந்து ஆண்டிற்கு (2024-29) ஏற்கனவே பதிவு பெற்று கட்டிட பொறியாளர்களாக உள்ள கீழ்க்காணும் நபர்கள் கால நீட்டிப்பு கோரி இணையதளவாயிலாக விண்ணப்பம் செய்தவர்களுக்கு உரிமம் வழங்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பொறியாளர் பெயர் / முகவரி</th><th>இணையதள விண்ணப்ப எண்</th><th>கல்வி தகுதி</th><th>தகுதி</th></tr>
<tr><td>1</td><td>திரு.வரதராஜ பெருமாள், 279,மகாலட்சுமி இல்லம், கோவிந்தராஜ்புரம், மணப்பாறை.</td><td>085/LS/2019/00004, நாள்.30.05.2024</td><td>டிசிஇ/ 1995</td><td>பொறியாளர் நிலை - III</td></tr>
<tr><td>2</td><td>திரு.பெ.முத்துநல்லு, 472,ஆவிக்காரன்பட்டி,</td><td>085/LS/2019/00006, நாள்.05.06.2024</td><td>டிசிஇ/ 2014</td><td>பொறியாளர் நிலை -III</td></tr>
</table></td>
<td>தீர்மான எண். 499<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.</td>
</tr>
</table>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | பண்ணப்பட்டி, மணப்பாறை. | | | | | |
| | | 3 | திரு.எம்.முஹீப் ரஹமான், 70/32, மணிகண்டன் நகர், மணப்பாறைபட்டி ரோடு, மணப்பாறை. | 085/LS/2020/00003, நாள்.30.05.2024 | டிசிஇ/ 2011 | பொறியாளர் நிலை - III | | |
| | | 4 | திரு.என்.நடராஜன், 13/21, லட்சுமி நாராயாண நகர், மதுரை ரோடு, மணப்பாறை. | 085/LS/2019/00007, நாள்.30.05.2024 | பிஇ/ 1993 | பொறியாளர் நிலை - I | | |
| | | 5 | திரு.கே.குமரேசன், 70/9, மணிகண்டன் நகர், மணப்பாறைபட்டி ரோடு, மணப்பாறை. | 085/LS/2020/00001, நாள்.30.05.2024 | டிசிஇ/ 2012 | பொறியாளர் நிலை - III | | |
| | | 6 | திரு.எஸ்.சசிகுமார், 23,பெருமாள் கோவில் வணிக வளாகம், ரயில்வே ஸ்டேஷன் ரோடு, மணப்பாறை. | 085/LS/2019/00003, நாள். 30.05.2024 | டிசிஇ/ 1996 | பொறியாளர் நிலை - III | | |
| | | 7 | திரு.சிவ.தமிழ் கதிரவன் 186, விராலிமலை ரோடு, அண்ணா நகர்,மணப்பாறை. | 085/LS/2019/00005, நாள்.30.05.2024 | டிசிஇ/ 1994 | பொறியாளர் நிலை - III | | |
| | | 8 | திரு.எம்.லோகநாதன், 22E/5. மஸ்தான் தெரு, மணப்பாறை. | 085/LS/2019/00011, நாள்.30.05.2024 | டிசிஇ/ 1996 | பொறியாளர் நிலை - III | | |
| | | 9 | திரு.மு.கண்ணன், உதயா நகர், உசிலம்பட்டி மணப்பாறை தாலுக்கா, | 085/LS/2019/00001, நாள்.04.06.2024 | டிசிஇ/ 1992 | பொறியாளர் நிலை - III | | |

<table>
<tr>
<td></td>
<td>மேலும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட விதிகள் - 2019-ன்படி புதியதாக 2024-29 ஆம் ஆண்டிற்கு பதிவு பெற்று கட்டிட பொறியாளராக கீழ்க்காணும் நபர் இணையதளவாயிலாக விண்ணப்பம் செய்தவருக்கு உரிமம் வழங்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பொறியாளர் பெயர் / முகவரி</th><th>இணையதள விண்ணப்ப எண்</th><th>கல்வி தகுதி</th><th>தகுதி</th></tr>
<tr><td>1</td><td>திரு.கே.ஷியாம்.<br>40/1,சௌரிராஜன் தெரு,<br>தீராம்பட்டி, மணப்பாறை.</td><td>085/LS/2024/00002,<br>நாள்.12.06.2024</td><td>பிஇ/<br>2017</td><td>பொறியாளர் நிலை - II</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு:-</u><br>
மன்றம் பதிவு செய்யலாம்.<br>
(ந.க.எண். 668/2024/ எப்.1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.06.2024</td>
<td>பொருள் – 10<br>
மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.டி, பிளாக் எண். 07, நகரளவு எண்.37 சந்து (ம) கால்வாய் என நகர நில அளவை ஆவணங்களில் வகைபாடு கொண்ட இடத்தினை திரு.துரைசாமி மற்றும் திருமதி.ராதிகா ஆகியோர் ஆக்கிரமித்துள்ளதை அகற்றக் கோரி திரு.ரங்கசாமி, த/பெ.திரு.ராமசாமி, 9சி/79, வீராச்சி தெற்கு தெரு, வெள்ளக்கல் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.No.9499/2024-ல் 1).அரசு செயலாளர், சென்னை, 2)நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை, 3) மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சி, 4)நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், தஞ்சாவூர், 5)வருவாய் கோட்டாட்சியர், ஸ்ரீரங்கம், 6)நகராட்சி ஆணையாளர் மற்றும் 7)வட்டாட்சியர், மணப்பாறை, ஆகியோரை எதிர் வாதிகளாக இணைத்து வழக்கு தொடர்ந்துள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு :-</u><br>
(அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>
(ஆ) மேற்படி வழக்கு தொடர்பான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 614/2024/ எப்.1)</td>
<td>தீர்மான எண். 500<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.</td>
</tr>
<tr>
<td>28.06.2024</td>
<td>பொருள் – 11<br>
இந்நகராட்சி பகுதியில் 15.05.2024 முதல் 19.05.2024 வரை கனமழை காரணமாக தாழ்வான பகுதியில் மழைநீர் தேங்கியதை பணியின் அவசர அவசிய கருதி தமிழ்நாடு</td>
<td>தீர்மான எண். 501<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தாதேவி,</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 2022 பிரிவு 57(7)-ன்கீழ் தொகை ரூ.73600/- செலவில் பணி மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1.மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.1138/2024/எச்1)</td>
<td>14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.</td>
</tr>
<tr>
<td>28.06.2024</td>
<td>பொருள் – 12<br>மணப்பாறை நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023-ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்-11 நாளங்காடியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் ரூ.106.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு 05.01.2024-ம் தேதி முதல் செயல்பட்டு வருகிறது.<br>மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.27968/2022/P1 நாள்:09.01.2024-ஆம் தேதிய சுற்றறிக்கையில் இந்நகராட்சிக்குட்பட்ட நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் கீழ்க்கண்ட தினசரி செய்தி நாளிதழ்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.<br>
<table>
<tr><td>News Paper:</td><td>Times of India, Hindu Tamil Thisai, and Employment News (Weekly).</td></tr>
<tr><td>Megazines:</td><td>Competion Success Review (C.S.R), CSR (G.K), Yojana, Thittam (திட்டம்), Kurukshetra.</td></tr>
</table>
அதன்படி, மேற்கண்ட தினசரி செய்தி நாளிதழ்கள் இந்நகராட்சிக்கு சொந்தமான நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் தினசரி விநியோகம் செய்ய உத்தேச செலவினத்தொகை ரூ.50,000/-க்கு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td>
<td>தீர்மான எண். 502<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.</td>
</tr>
<tr>
<td>28.06.2024</td>
<td>பொருள் – 13<br>இந்நகராட்சி அலுவலக ஈப்பு வாகன எண்:TN45CX0084, TN45CX5077 மற்றும் TN45BZ7050-க்கு 2024-2025-ஆம் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு வாகனத்தின் தயாரிப்பு நிறுவனமான திருச்சி, சிவா ஆட்டோ மொபைல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள உத்தேச செலவினத்தொகை ரூ.5.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள</td>
<td>தீர்மான எண். 503<br>அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.<br>திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 14**<br>மணப்பாறை நகராட்சியில் 15-வது மத்திய நிதிக்குழு மானியம் (CFC) 2023-2024 மற்றும் 2024-2025-ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் தார் சாலைகள் அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிக்கு ரூ.169.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு **28.02.2024**-ஆம் தேதி கோரப்பட்டு. அதற்கான விளம்பரத்தினை **14.02.2024**-ஆம் தேதி Financial Express ஆங்கில தினசரி நாளிதழிலும் தினச்சூரியன் தமிழ் தினசரி நாளிதழிலும் விளம்பரம் செய்தமைக்கு **Sudha ads,** திருப்பூர் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பில் பட்டியல் தொகை ரூ.**9,555**/-ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**:-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.. | **தீர்மான எண். 504**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 15**<br>மணப்பாறையில் 20.05.2024-ஆம் தேதியில் பெய்த கன மழை காரணமாக இந்நகராட்சிக்குட்பட்ட சாணான்மடை குளத்தின் தெற்கு பகுதியில் உசிலம்பட்டி ஊராட்சி பகுதியில் அமைந்துள்ள GHCL மில் வளாகத்திற்குள் மழைநீர் தேங்கி நின்று வெளியேற வழியில்லாமல் வளாகத்தின் சுற்றுச்சுவர் உடைந்த காரணத்தினால் மழைநீர் வேகமாக சாணான்மடை குளத்தின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள Inlet பகுதியை உடைத்து குளத்தினுள் மழைநீர் சென்றது. மேற்கண்ட சாணான்மடை குளத்தில் உடைந்துள்ள Inlet பகுதியை சரிசெய்வது சம்மந்தமாக மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மேற்படி 20.05.2024-ஆம் தேதியில் மழைநீர் அதிக அளவில் பெய்து இயற்கை சீற்றத்தினால் சாணான் மடை **Inlet** பகுதி உடைந்த காரணத்தினால் அதனை சரி செய்வது சம்மந்தமாக மன்றத்தின் மூலம் அங்கீகரிப்பு செய்யலாம். | **தீர்மான எண். 505**<br>**பெரும்பான்மையான நகர்மன்ற உறுப்பினர்கள் ஆட்சேபனை தெரிவித்ததால் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.**<br>**ஆட்சேபனை தெரிவித்த நகர்மன்ற உறுப்பினர்களின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.**<br>1. திருமதி.ஆர்.முத்துலெட்சுமி, நகர்மன்ற துணைத்தலைவர்,<br>2. திரு.மு.ம.செல்வம், 7-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர். |

| | | |
|---|---|---|
| | | 3. திரு.ச,ஜான்பீட்டர், 23-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>4. திருமதி.பா.நிர்மலா, 11-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>5. திரு.ப.மணி, 3-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>6. திரு.அ.பிரான்சிஸ் சேவியர், 9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>7. திரு.ம.செல்வா, 16-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>8. திருமதி. சொ.செல்லம்மாள், 1-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>9. திருமதி.ரா.தீபா, 22-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>10. திருமதி. வி.அழகுசித்ரா, 2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>11. திரு.பொ.கௌசிக், 26-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>12. திரு. அ எட்வின் அபிலாஷ், 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>13. திரு.ச.இராமன், 27-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>14. திரு.லெ.எத்திராஜ், 12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>15. திருமதி.த.வாணி, 13-வது வார்டு நகர்மன்ற |

| | | |
|---|---|---|
| | | உறுப்பினர்<br>16. திரு.அ.சவரிமுத்து, 10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>17. திருமதி.சு.சர்மிளா, 6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>18. திருமதி.பா.சுதா, 18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>19. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 28.06.2024 | **பொருள் – 16**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மலையாண்டி தெருவில் உள்ள நகராட்சி பொது கழிப்பிட கட்டிட மேற்கூரை மற்றும் சுற்றுச்சுவர் சேதமடைந்துள்ளதால் பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுவதற்கு முன் அதனை இடித்து அப்புறபடுத்திடவும் அதற்கான செலவினத்தொகை ரூ.0.70 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 506**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 17**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 பொத்தமேட்டுப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள குளோரின்கேஸ் பிளான்ட் மூலம் காவேரி குடிநீரில் குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருவதில், மேற்படி குளோரின் பிளான்ட் ஆர்.கே.எண்டர்பிரைசஸ், பாலக்காடு, கேரளா மாநில நிறுவனத்தின் மூலம் நிறுவப்பட்டு சுமார் 5 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. மேலும் அதனை இயக்குவதற்கு தானே இயங்கும் Automatic Sensor இயந்திரம் மூலம் இயக்கும் கருவி பொருத்தப்பட்டு கண்காணிப்பு செய்ய கைபேசியில் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.<br>தற்பொழுது மேற்படி குளோரின்கேஸ் பிளான்டில் 2024-2025-ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு | **தீர்மான எண். 507**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| | பணிக்கு உத்தேச செலவினத்தொகை ரூ.1.20 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | |
| 28.06.2024 | **பொருள் – 18**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 பொத்தமேட்டுப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள குளோரின்கேஸ் பிளான்ட் மூலம் காவேரி குடிநீரில் குளோரின் கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருவதில், மேற்படி குளோரின் பிளான்ட் ஆர்.கே.எண்டர்பிரைசஸ், பாலக்காடு, கேரளா மாநில நிறுவனத்தின் மூலம் நிறுவப்பட்டு சுமார் 5 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. மேலும் அதனை இயக்குவதற்கு தானே இயங்கும் Automatic Sensor இயந்திரம் மூலம் இயக்கும் கருவி பொருத்தப்பட்டு கண்காணிப்பு செய்ய கைபேசியில் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.<br>தற்பொழுது மேற்படி குளோரின்கேஸ் பிளான்டில் 2024-2025-ஆம் ஆண்டிற்கான 100 Kgs கேஸ் மாதம் மாதம் தேவைக்கு ஏற்ப விநியோகம் செய்யும் பணிக்கு உத்தேச செலவினத்தொகை ரூ.3.10 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 508**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 19**<br>மணப்பாறை நகராட்சியில் 2022-2023-ஆம் ஆண்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 நாளங்காடி பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் ரூ.106.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டது. மேற்படி நூலகத்தில் மேஜைகள், நாற்காலிகள் புத்தகங்கள் வைக்கும் ரேக்குகள் அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 509**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**ஆட்சேபனை தெரிவித்த நகர்மன்ற உறுப்பினர்களின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.**<br>1. திருமதி.சொ.செல்லம்மாள், 1-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>2. திருமதி.ரா.தீபா, 22-வது |

| | | |
|---|---|---|
| | 2. செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>3. திருமதி. வி.அழகுசித்ரா, 2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>4. திரு.பொ.கௌசிக், 26-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>5. திரு.அ எட்வின் அபிலாஷ், 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>6. திரு.ச.இராமன், 27-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>7. திரு.லெ.எத்திராஜ், 12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>8. திருமதி.த.வாணி, 13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>9. திரு.அ.சவரிமுத்து, 10-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>10. திருமதி.சு.சர்மிளா, 6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>11. திருமதி.பா.சுதா, 18-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>12. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| | | |
| 28.06.2024 | **பொருள் – 20**<br>மணப்பாறை நகராட்சி அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு C.C.T.V கேமராவில் அடிக்கடி பழுது ஏற்பட்டு சரிவர இயங்காத நிலை ஏற்படுகிறது. இதனை முழுமையாக சரி செய்யும் பொருட்டு இந்நகராட்சி அலுவலகத்தில் புதிதாக கண்காணிப்பு C.C.T.V கேமரா அமைக்கும் பணிக்கு உத்தேச செலவினத்தொகை ரூ.2.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 510**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 21**<br>மணப்பாறை நகராட்சி அலுவலகத்தில் இயங்கி கொண்டிருக்கும் UPS-க்கு வரும் அனைத்து EB-LINE வயர்கள், அதற்கான Tripper சுவிட்சுகள் அனைத்தும் பழுதாகிவிட்டதால் இவ்வலுவலத்தில் இயங்கி வரும் கணினிகள் வேலை நேரத்தில் அடிக்கடி Shut Down ஆகிறது. இதனை உடனடியாக சரி செய்யவும் மற்றும் UPS அமைக்கப்பட்டுள்ள இடத்தில் கிரில்கேட் அமைக்கவும் உத்தேச செலவினத்தொகை ரூ.0.50 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 511**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| 28.06.2024 | **பொருள் – 22**<br>மணப்பாறை நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பிரிவு பணியாளர்கள் அலுவலக வேலை காரணமாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அலுவலகத்திற்கு நேரடியாக இணையதள வசதியுடன் மடிக்கணினி எடுத்து செல்ல வேண்டியுள்ளதால் 2016-ஆம் ஆண்டில் மடிக்கணினி வாங்கப்பட்டு நாளது தேதி வரை நல்ல நிலையில் இயங்கி வருகிறது. தற்பொழுது மிகவும் Slow-ஆக இயங்குவதால் Laptop Website மற்றும் மிக அதிகமான Report-கள் இயக்க இயலாத சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும் 8 வருடங்கள் பழைய மடிக்கணினியாக உள்ளதால் GEM RATE ரூ.1.00 இலட்சத்தில் புதிதாக மடிக்கணினி வாங்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 512**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 23**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 மணப்பாறைப்பட்டியில் (ஜோதி பாஸ்கர் நகர்) மழைநீர் வடிகாலுடன் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 513**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 24**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 தீராம்பட்டி மேல்நிலைநீர்த்தேக்க தொட்டி முதல் மாரியம்மன் கோவில் நாடகமேடை வரை பகிர்மான குழாய் பதித்தல் பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 514**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 25**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 வாகைக்குளம் மெயின் ரோடு சிறுபாலம் அமைக்கும் பணி மற்றும் வார்டு எண்.19 காந்திநகர் நூலகம் அருகில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.2.20 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு | **தீர்மான எண். 515**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி,** |

| | | |
|---|---|---|
| | வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 26**<br>இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள பதிவறை வைப்பு அறையில் கோப்புகள் மற்றும் ஆவணங்களை வைப்பதற்கு தேவைப்படும் ரேக்குகள் வாங்குதற்கும், உத்தேச செலவினத் தொகை ரூ.0.60 இலட்சத்திற்கும் ரேக்குகளை அரசு அங்கிகாரம் பெற்ற TANSI நிறுவனத்தில் வாங்குவும், செலவு தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 516**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 27**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 செவலூர் வடக்கு தெருவில் பகிர்மான குழாய் பதித்தல் பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 517**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 28**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் சீரமைப்பு பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 518**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 29**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 தீராம்பட்டி முதல் விடத்திலாம்பட்டி செல்லும் சாலை குறுக்கு தெரு லூர்து வீட்டின் அருகில் தார் சாலை சீரமைக்கும் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண். 519**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி,** |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 30**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 அண்ணாவிநகர் வடக்கு தெருவில் மழைநீர் வடிகால் சீரமைக்கும் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 520**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 31**<br>அரசாணை எண்.120 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (WS2) நாள்.22.08.2023-ன்படி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் நகராட்சிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதில் 31.03.2024 வரை பராமரிப்பு கட்டணமாக 1000 லிட்டருக்கு ரூ.16/- நிர்ணயம் செய்யப்பட்டதை 01.04.2024 முதல் 31.03.2025 வரை 1000 லிட்டருக்கு ரூ.16.80/- என மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்ற விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மான எண். 521**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 32**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.35295/2022/EA2SWM-12, நாள்:10.01.2023 மற்றும் நகர்மன்ற தீர்மானஎண்:122, நாள்:31.03.2023-ன்படி, இந்நகராட்சி திட்டத்தில் வெளிக்கொணர்வு முகமை மூலம் முதல்நிலை திடக்கழிவு சேகரம் செய்யும் பணிகளுக்கு Saram Enviro Services Pvt.Ltd, சென்னை என்கிற தனியார் ஒப்பந்த நிறுவனத்திற்கு 01.06.2023 முதல் 31.05.2024 வரை ஒரு வருடகாலத்திற்கு பணிகள் மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் செய்யப்பட்டு வரும் நிலையில், இப்பணியானது 31.05.2024-ம் தேதியுடன் பணிக்காலம் நிறைவடைகிறது.<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள காலக்கெடுப்படியும், நிபந்தனைகளின்படியும், தொடர்ந்து | **தீர்மான எண். 522**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| | இந்நிறுவனம் பணிமேற்கொள்ள வேண்டியுள்ளதால், 01.06.2024 முதல் 31.08.2024 வரையிலான மூன்று மாதம் காலத்திற்கு மேற்காணும் பணிகளை, Saram Enviro Services Pvt.Ltd, சென்னை நிறுவனத்திற்கு பணிநீட்டிப்பு செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.54.27 இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**<br>1. பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.<br>2. பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ளதாலும், பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் பணி உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>3. 01.06.2024 முதல் 31.08.2024 வரை மூன்று மாதம் காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யமன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4386/2022/எச்1) | |
| 28.06.2024 | **பொருள் – 33**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 1995-ஆம் ஆண்டு முதல் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் நகரின் பொதுமக்களுக்கு காவேரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருச்சிராப்பள்ளி மூலம் ரூ.17.70 கோடி மதிப்பீட்டில் CGF நிதியின் கீழ் மணப்பாறை நகரின் குடிநீர் தட்டுப்பாட்டை போக்கி சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு சீரான காவேரி குடிநீர் 3.50MLD முதல் 4.00MLD வரை தினந்தோறும் போதுமான அளவிற்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.<br>மேற்படி காவேரி குடிநீர் தினந்தோறும் வழங்கப்படவுள்ளதால் வால்வு ஆப்ரேட்டர் மற்றும் மேல்நிலைநீர்த்தேக்கதொட்டி பராமரிப்பு பணிகளுக்கு போதுமான பணியாளர்கள் இந்நகராட்சி குடிநீர் பிரிவில் இல்லாத காரணத்தினால் குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்வதில் மிகவும் சிரமமான சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே குடிநீர் விநியோகப்பணிக்கு தற்காலிகமாக ஐந்து பணியாளர்கள் தேவைப்படுவதால் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.R.C.J3./31428/2023 நாள்.30.06.2023 தினக்கூலி விகித அட்டவணையின்படி, ஒரு வருடத்திற்கு பணிமேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத்தொகை ரூ.13.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 523**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| | 2. செலவினத்தொகையினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம் | |
| 28.06.2024 | **பொருள் – 34**<br>மாவட்ட ஆட்சித்தலைவர், திருச்சிராப்பள்ளி அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகள் மற்றும் துணை இயக்குநர், சுகாதாரபணிகள், திருச்சிராப்பள்ளி அவர்களின் அறிவுரைகளை பின்பற்றி நகர்மன்ற தீர்மான எண்.343,நாள்.30.07.2023-ன்படி, டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 37 கொசு ஒழிப்பு பணியாளர்களை 01.01.2024 முதல் ஆறுமாத காலம் வரை பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது டெங்கு காய்ச்சல் பாதிப்பு தொடர்ந்து வருவதால், ஏற்கனவே பணி மேற்கொள்ளும் மாதா சுய உதவிக்குழு மூலம் மேலும் 6 மாதங்களுக்கு (01.07.2024 முதல் 31.12.2024 வரை) பணி மேற்கொள்ளவும் பணிக்குரிய தொகையினை ஏற்கனவே வழங்கப்படும் விலை விகிதத்தின் அடிப்படையில் வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30.00 இலட்சத்திற்கும், செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், பணியினை அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1949/2021/எச்1) | **தீர்மான எண். 524**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 35**<br>**திரு.V.அழகுசித்ரா, 2 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. மணப்பாறை நகராட்சி வார்டு எண்.2 செவலூரிலிருந்து விடத்திலாம்பட்டி செல்லும் சாலையின் குறுக்கு சுமார் 850 மீட்டர் நீளமுள்ள பழுதான தார்சாலையை புதுப்பித்து தார்சாலை அமைத்து தரக்கோருதல்<br>2. மணப்பாறை நகராட்சி வார்டு எண்.2 செவலூர் பிரதான சாலையின் மேற்புறம் அமைந்துள்ள தண்ணீர் குளத்தில் மழை அதிகமாக பெய்யும் போது மழைநீர் வந்து தண்ணீர் குளம் முழுமையாக நிரம்பி செவலூர் மெயின் சாலை வழியாக ஊருக்குள் புகுந்து சேதப்படுத்தி வருகிறது என்பதால் கடந்த 2022 - 2023 ஆண்டில் சுமார் 150 மீட்டர் தூரம் மழைநீர் வடிகால் அமைத்து மழைநீர் ஊருக்குள் எளிதில் புகும் விதமாக உள்ளது. | **தீர்மான எண். 525**<br>**அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| | எனவே ஊர் பொதுமக்களை வெள்ளத்திலிருந்து காக்கும் விதமாக மீதமுள்ள பகுதிக்கு மழைநீர் வடிகால் மற்றும் 2 சிறு பாலமும் அமைத்து தரக்கோருதல் | |
| 28.06.2024 | **பொருள் – 36**<br>**திரு.A.சவரிமுத்து, 10 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. மஞ்சம்பட்டி சிறுவர் நகர் பகுதியில் சுமார் 200 மீட்டர் தூரம் புதிதாக மழைநீர் வடிகால் வசதி செய்து தரும்படியும், அதே பகுதியில் 1 எண்ணிக்கை சிறுபாலமும் அமைத்துத்தரக் கோருதல்<br>2. மஞ்சம்பட்டி, சவரிமுத்து தெரு, அந்தோணியார் கோவில் வடக்கு தெரு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சிமெண்ட் சாலை ஓர பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் வசதி செய்துதரக் கோருதல்<br>3. மஞ்சம்பட்டி இன்னாசியார் தெரு சுமார் 100 மீட்டர், அருளப்பன் தெரு சுமார் 100 மீட்டர் அளவில் உள்ள மண்சாலையை சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் 2 சிறுபாலம் அமைத்து தரக்கோருதல் | **தீர்மான எண். 526**<br>**அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 37**<br>**திரு.ம.செல்வா, 16 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. அண்ணா நகர் திரு.குணசேகரன் ஆசிரியர் வீட்டுத் தெருவில் கழிவுநீர் சாக்கடை அமைத்தல் பணி<br>2. அண்ணா நகர் கிழக்குப்பகுதி ரேசன் கடை, பூங்கா உள்ள தெருவில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி வீடுகளுக்குள் சென்றுவிடுகிறது. ஆகையால் அப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி<br>3. அண்ணா நகர் முழுவதும் கழிவுநீர் சாக்கடை மிகவும் பழுதாகி உள்ளது. ஆகையால் அண்ணா நகர் பகுதி முழுமைக்கும் புதிய சாக்கடை அமைத்தல் பணி. | **தீர்மான எண். 527**<br>**அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 38**<br>**திரு.த.தங்கமணி, 19 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. பாரதிதாசன் சாலையில் நூலகம் அருகில் உள்ள சாக்கடை பாலம் மிகவும் பழுதடைந்து இடிந்து உள்ளது. எனவே அதனை முழுவதுமாக இடித்து புது பாலம் அமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரக் கோருதல்.<br>2. காந்தி நகர் ராமு கடை அருகில் உள்ள சாக்கடை பாலம் மிகவும் தாழ்மையாக | **தீர்மான எண். 528**<br>**அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| | உள்ளதால், கழிவு நீர் செல்ல வழி இல்லாமல் தேங்கி வெளியே வருகின்றது. எனவே அதனை சரிசெய்து பாலத்தை உயர்த்தி கழிவுநீர் தேங்காமல் செல்ல வழி செய்ய கோருதல்<br>3. செல்லமுத்து வீடு அருகில் சாக்கடை மிகவும் பழுதடைந்து உள்ளது. எனவே அதனை சரிசெய்து கழிவுநீர் செல்ல வழி செய்ய கோருதல் | |
| 28.06.2024 | **பொருள் – 39**<br>**திருமதி.த.மனோன்மணி, 20 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. மயில் ஆர்ச் அருகில் உள்ள அங்கன்வாடி பள்ளி அருகில் உள்ள சாக்கடை பாலம் மிகவும் தாழ்மையாக உள்ளதால், அது வழியாக செல்லக்கூடிய கழிவுநீர் தேங்கி நின்று வெளியில் வருகின்றது. அங்கு கழிவு நீர் செல்லாத காரணத்தால், சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. எனவே அதனை உடனடியாக சரிசெய்து பாலத்தை உயர்த்தி கழிவுநீர் தேங்காமல் செல்ல வழி செய்ய கோருதல்<br>2. கலைஞர் கருணாநிதி நகர், சின்ன நாட்டாண்மை மோகன் வீடு எதிர்புறம் Engr.கண்ணன் வீடு செல்லும் வழியில் உள்ள சாக்கடை பாலம் கழிவுநீர் செல்ல தடையாக உள்ளது. எனவே அந்த பாலத்தை உயர்த்தி கழிவுநீர் சீராக செல்ல வழிசெய்ய கோருதல்<br>3. அய்யலு தெருவில் முன்னாள் நகர்மன்ற தலைவர் ஜெயராமன் வீடு முன்புறம் உள்ள சாக்கடை பாலம் கழிவு நீர் செல்ல தடையாக உள்ளது. எனவே அந்த பாலத்தை உயர்த்தி கழிவுநீர் சீராக செல்ல வழிசெய்ய கோருதல்<br>4. மயில் ஆர்ச் அருகில் ரேசன் கடை முன்புறம் உள்ள பாலத்தை தண்ணீர் செல்ல ஏதுவாக அமைத்து தரக்கோருதல் | **தீர்மான எண். 529**<br>**அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் – 40**<br>**திருமதி.ரா.தீபா 22 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>1. எனது வார்டுக்கு உட்பட்ட மஸ்தான் தெரு வக்கீல் செல்வராஜ் வீடு அருகில் உள்ள சிமெண்ட் சாலை மிகவும் பழுதடைந்து மிகவும் அபாயகரமான உள்ளது. மேலும் அந்த சாலையில் ஏதேனும் அவசர ஊர்தி செல்லக்கூட பாதை இல்லை. ஆகவே அந்த சிமெண்ட் சாலையை அமைத்து தரக்கோருதல்<br>2. எனது வீட்டின் எதிரில் உள்ள பூங்கா இடத்தை நீண்ட வருடங்களாக பயன்படுத்தாமல் புதர்மண்டி உள்ளது. அதனை சீர் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு பார்க் அமைத்து தரக்கோருதல்<br>3. அப்பாவு தெரு சிமெண்ட் சாலை 40 வருடங்களுக்கு முன் போடப்பட்ட சிமெண்ட் சாலை | **தீர்மான எண். 530**<br>**அனுமதிக்கப்பட்டது.**<br>**திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |

| | | |
|---|---|---|
| | மிகவும் சேதமடைந்துள்ளது. அதனை புதிய சிமெண்ட் சாலை அமைத்து தர வேண்டுதல்<br>4. மஸ்தான் தெருவில் சந்தியாகப்பர் கோவிலிலிருந்து செல்லும் கழிவு நீர் கால்வாய் மிகவும் சேதமடைந்தும், மிகவும் குறுகலாகவும் உள்ளது. மேலும் சாக்கடை நீர் செல்ல வழியில்லாமல் தேங்கி கிடக்கிறது. மக்களுக்கு நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. ஆகவே அதனை விரைவாக புதுப்பித்து தரக்கோருதல்<br>5. பஸ் ஸ்டாண்டில் உள்ள இலவச சிறுநீர் கழிப்பிடத்தை இடம் மாற்றம் செய்து மக்களை சுகாதார சீர்கேட்டிலிருந்து பாதுகாக்க கோருதல். | |
| 28.06.2024 | **பொருள் – 41**<br>**திரு.எஸ்.இராமன் 27 - வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கொண்டு வரும் பொருள்**<br>**1.** மணப்பாறை நகராட்சி வார்டு 27-க்குட்பட்ட மணப்பாறைப்பட்டி ரோடு மேற்கு ER.சேசுராஜ்குமார் வீட்டுத்தெரு, PV பெஸ்ட் ஸ்கூல் ரோடு, நல்லு மேஸ்திரி வீடு உள்ள ரோடு ஆகிய சாலைப்பகுதியில் சுமார் 700 மீட்டர் தூரம் மழைநீர் வடிகால் வசதி செய்து கொடுக்க கேட்டுக்கொள்கிறேன்.<br>**2.** மணப்பாறைப்பட்டி ரோடு மேற்கு வார்டு 27-ம் வார்டு 21-ம் இணைக்கும் விதமாக கடந்த 20 ஆண்டுகளுககு முன் நமக்கு நாமே திட்டத்தில் போடப்பட்டு மிகவும் சேதமான சிமெண்ட் சாலையை புதுப்பித்து தரக்கோருதல். | **தீர்மான எண். 531 அனுமதிக்கப்பட்டது. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினரின் ஆட்சேபனை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது.** |
| 28.06.2024 | **பொருள் - 42**<br>மணப்பாறை நகராட்சி பொது சுகாதார பிரிவு அனைத்து வார்டுகளிலும் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் பெரியவாய்க்கால்களில் அதிக மண் படிந்து அடைப்பு ஏற்படுவதால் மழை பெய்யும் போது மழைநீர் வடிகாலை விட்டு மேல் எழும்பி சாலையில் செல்கிறது. சில சமயங்களில் தாழவாக பகுதிகளில் குடியிருப்புகளுக்கு உள்ளேயும் சென்றுவிடும் சூழ்நிலை உருவாகிறது. மேலும் பொது சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. இந்நகராட்சியில் போதுமான டிப்பர் லாரி மற்றும் போதுமான மனித ஆற்றல் இல்லாத காரணத்தினாலும் தனியாக சிறிய அளவிலான HITTACHI JCB மற்றும் இரண்டு டிராக்டர் வாகனங்கள் வாடகைக்கு எடுத்து அனைத்து வார்டுகளிலும் உள்ள வடிகால் மற்றும் வாறுகால்களில் படிந்துள்ள மண் அள்ளும் பணி மேற்கொள்ளுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண். 532 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு</u>** :-<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1256/2024/எச்1) | |

**(ஒம்) கீதா.ஆ.மைக்கேல்ராஜ்**
**நகர்மன்றத் தலைவர்**
**மணப்பாறை நகர்மன்றம்**